1978 ஏப்ரல் 7]

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் அறிவித்தவை பால் அதிகமாக வரக்கூடிய அளவிற்கு பயன்படும். உழவிற்குப் பயன்படுகிற அளவிற்கு காங்கேயம் காளைகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்தில் இருக்கிற மாட்டுப்பண்ணையை எடுத்துக் கொள்ளலாமா என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே சிறப்பாக விளங்குகின்ற, ஒசூர் கால்நடைப் பண்ணைக்கு இன அபிவிருத்திக்காக, காளைமாடுகள், கிடாரிகள் எத்தனை கொடுக்கப்பட்டன. இன்னும் எவ்வளவு கொடுக்கப் படும் என்கின்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே; இதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

திருச்சியில் பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள்.

* 844 வினா— திரு. சி. மாணிக்கம் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்- கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் பர்மா, இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டும் வேலை எப்போது துவங்கப் படும்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: திருச்சியில்; பர்மா இலங்கை அகதிகளுக்காக வீடு கட்டுவதற்கென்று நிலம் ஒதுக்கப் படவில்லை.

திரு. கூ. ச. முருகேசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர் தொகுதியில் காமராஜ் நகர் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் பர்மா இலங்கை தமிழர்கள் இருக்கிறார்கள். குண்டூர் என்ற பகுதியிலும் பர்மா தமிழர்கள் இருக்கிறார்கள். வாழவந்தான்கோட்டையிலும் பர்மா அகதிகள் இருந்துவருகிறார்கள். இங்கெல்லாம் காலனி இருக் கின்ற இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடமிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி ; அரசாங்கத்திற்கு உரிய முறையில் விண்ணப்பங்களை செய்தால் நிச்சயமாக வீடுகள் கட்டுவதற்கு கடன் வழங்க அரசு முன் வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 ஏப்ரல் 7

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட கடன் எவ்வளவு வழங்கப்படுகிறது? வழங்குகின்ற அதிகாரி யார்? கொடுக்கப்படும் கடன் தொகை தவணைமுறையில் வழங்கப்படுகிறது என்ருல் எத்தனை தவணைகளில் வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பர்மா, இலங்கையிலிருந்து அகதிகளாக தாயத்திற்கு திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய கடனை கோட்டாட்சித் தலைவரும், தனிக் கோட்டாட்சித் தலைவரும் வழங்குகிருர்கள். வீடுகட்டும் கடன் வழங்குகின்ற விஷயத்தில் கிராமப்புறத்தில் இருக்கின்றவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது, இதில் 700 ரூபாய் மான்யமாக கொடுக்கப்படுகிறது, 2,300 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு 6,000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது, எத்தனை தவணைகளில் இது கொடுக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதில் முதல் தவணையாக 600-ம், இரண்டாவது தவணையாக 2,100-ம், மூன்ருவது தவணையாக 2100-ம், நான்காவது தவணையாக 1,200 மாக வழங்கப்படுகிறது. கிராமப்புறத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனைப்பொறுத்தவரையில் முதல் தவணையாக 200 ரூபாயும், இரண்டாவது தவணையாக 700 ரூபாயும், மூன்ருவது தவணையாக 1,050 ரூபாயும், நான்காவது தவணையாக 1,050 ரூபாயும் வழங்கப்படுகிறது.

திரு. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஸ்ரீமாவோ பண்டாரநாயகா — சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கை தமிழர்கள் அகதிகளாக இன்னும் எத்தனை பேர்கள் வரவேண்டியுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இன்னும் மூன்றரை லட்சம் அகதிகள் வரவேண்டியிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்; திருச்சியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் போல மற்ற மாவட்டங்களிலும் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னுடைய பதிலை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வீடு கட்டுகின்ற திட்டம் எதுவும் இப்போது இல்லை. எனவே இந்த கேள்விக்கு இடம் இல்லை.

மஞ்சள் ஏற்றுமதி

* 845 வின— திரு எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 ஆம் ஆண்டு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் பட்ட மஞ்சள் எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு என்ன?